பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

09 09 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசு துணைத்தலைவர் தேர்தல் இன்று நடைபெறுகிறது.
- தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நிறுத்தப்பட்டிருப்பது, நாடு முழுவதும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- சுயசார்பு இந்தியா இயக்கம் பள்ளி-கல்லூரி மாணவர்களிடையே வேரூன்ற வேண்டியதன் அவசியத்தை மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.
- அஇஅதிமுக ஆட்சியின்போதுதான் கள்ளக்குறிச்சி உள்ளிட்ட புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- CAFA கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனும், எதிர்க்கட்சிகளின் சார்பில் திரு. சுதர்சன் ரெட்டியும் போட்டியிடுகின்றனர்.

குடியரசு துணைத்தரைவரை நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் வாக்களித்து தேர்வு செய்ய உள்ளனர்.

இந்த தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் மாலை 6 மணிக்கு வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

542 மக்களவை உறுப்பினர்களும், 239 மாநிலங்களவை உறுப்பினர்களும் இந்த தேர்தலில் வாக்களிக்க உள்ளனர்.

வெற்றி பெறுவதற்கு 391 வாக்குகள் தேவைப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குடியரசு துணைத் தலைவராக இருந்த திரு. ஜெக்தீப் தன்கர், உடல்நலக் குறைவு காரணமாக பதவியை கடந்த ஜூலை மாதம் ராஜினாமா செய்ததை அடுத்து இந்த தேர்தல் நடைபெறுகிறது.

இதனிடையே திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பது நாடு முழுவதும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மிகச்சிறந்த குடியரசு துணைத்தலைவராக அவர் இருப்பார் என்றும், அவருடைய ஞானம் மற்றும் பரந்துபட்ட அறிவால் குடியரசு துணைத்தலைவர் பதவியை வளப்படுத்துவார் என்று மக்கள் நம்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சுயசார்பு இந்தியா இயக்கம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே வேரூன்ற வேண்டியதன் அவசியத்தை மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த இயக்கத்தை முன்னோடி திட்டமாக கொண்டு செல்லக்கூடியவர்கள், மாணவர்கள் என்று அவர் கூறினார்.

குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினர் இடையே சுதேசி உணர்வை ஏற்படுத்துவடன், புதுமை மற்றும் நாட்டின் கலாச்சார உணர்வை பரப்ப முடியும் என்று திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

<<<<>>>>

14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை தமிழ்நாடு போட்டிக்கான அட்டவணையை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நேற்று வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஹாக்கி உலகக்கோப்பையை இந்திய அணி வெல்லும் என்று அவர் கூறினார்.

தமிழகத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க மாநில அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் மதுரை மற்றும் சென்னையில் நடைபெற உள்ள ஹாக்கிப் போட்டியில் பங்கேற்க உள்ள விளையாட்டு வீரர்களுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சியின்போதுதான் கள்ளக்குறிச்சி உள்ளிட்ட புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே நேற்று நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், இந்த மாவட்டத்திற்கு புதிய அரசு மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வந்தது அஇஅதிமுக ஆட்சிதான் என்று தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சியின்போது ஏழை எளிய மக்களுக்கான ஏராளமான நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும், அந்த திட்டங்களை அரசியல் காரணங்களுக்காக திமுக அரசு நிறுத்திவிட்டதாகவும் அவர் குறை கூறினார்.

அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக கூட்டணி வெற்றி பெறுவது உறுதி என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

அரசுப் பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திருப்பத்தூர் மாவட்டம் மேல்சாணங்குப்பம் அரசு தொடக்கப் பள்ளியில் 5ஆம் வகுப்பு மாணவியிடம் மதுபோதையில் தலைமை ஆசிரியர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுக ஆட்சியில் அரசுப் பள்ளிகள் சீரழிந்திருப்பதையே இந்த சம்பவம் உணர்த்துவதாக திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

<<<<>>>>

ரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ரயில்வே பாதுகாப்புப் படை பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சேலம் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு அறிவுறுத்தல்களை ரயில்வெ பாதுகாப்புப் படையினர் வழங்கி வருகிறார்கள்.

பயணிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சேலம் ரயில்வே பாதுகாப்புப் படை ஆய்வாளர் திரு. முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மொரீஷியஸ் பிரதமர் திரு. Navin Chandra Ramgoolam, எட்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

**<<<<>>>>**

நேபாளத்தில் நேற்று நிகழ்ந்த வன்முறைச் சம்பவத்தில் 19 பேர் உயிரிழந்தது குறித்து விசாரணை நடத்த அந்நாட்டு அரசு குழு ஒன்றை அமைத்துள்ளது.

**<<<<>>>>**

உத்தரப்பிரதேசத்தில் அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் அங்கீகாரம் மற்றும் மாணவர் சேர்க்கை நடைமுறைகள் குறித்து விசாரணை நடத்த அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

**<<<<>>>>**

மகாராஷ்டிர மாநிலம் தாராப்பூர் அருகே தொழிற்சாலை ஒன்றில் அமில கசிவால் பதற்றம் ஏற்பட்டபோதிலும், தொழிலாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் Yadish Deshmukh உறுதி செய்தார்.

**<<<<>>>>**

தென்காசி மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டங்களை கிராமப்புறப் பகுதிகளில் கொண்டுசேர்க்கும் வகையில் நடைபெற்ற வங்கிசார் நிதி சேவைகள் விழிப்புணர்வு முகாமில் திரளான மக்கள் பங்கேற்றனர்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டம் ஜம்பை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், பல்லி விழுந்த உணவை சாப்பிட்ட 86 மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் மதுபான விற்பனையில் ஈடுபட்டு சிறை தண்டனை பெற்று, விடுதலை அடைந்த 18 பேருக்கு மறுவாழ்வுக்கான தொழிற்பயிற்சியை ஆட்சியர் திரு. பிரதாப் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் வடுவூர் கோதண்டராமர் கோவிலில் திருமஞ்சனம் நிறைவு பெற்ற கவசம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளையில் உள்ள தூய அலங்கார மாதா ஆலய விழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<>>>>

ஆசிரியர் தகுதித் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

CAFA கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

தஜிகிஸ்தானில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் ஓமனை வென்று வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

ஆட்டநேர முடிவில் இரு அணிகள் தலா ஒரு கோல் அடித்தன.

இதையடுத்து பெனால்ட்டி ஷூட்அவுட் முறையில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்த வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் இன்று தொடங்குகின்றன.

ஆஃப்கனிஸ்தான் - ஹாங்காங் இடையேயான முதல் ஆட்டம் இன்றிரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியுடன் மோதுகிறது.

<<<<>>>>

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் பி.வி. சிந்து, லக்ஷயா சென், HS. பிரனாய், ஆயுஷ் ஷெட்டி, ஸ்ரீகாந்த் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இதில் பங்கேற்கிறார்கள்.

<<<<>>>>

23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று புரூனே அணியை எதிர்கொள்கிறது.

தோஹாவில் இப்போட்டி இரவு மணி 8.45க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பெங்களூரு - ஹரியானா அணியையும், பட்னா - புனே அணியையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் தில்லி - பெங்கால் அணியையும், குஜராத் - ஜெய்ப்பூர் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>